# நான் மற்றும் நீங்கள்... (I and Thou)

வெற்றிகரமான நட்புறவைக் கட்டமைப்பதில் இரண்டு முக்கியமான அம்சங்களை கவனத்தில் கொள்வது அவசியம். 'தருவது மற்றும் பெறுவது' ஆகியவைதான் அந்த 2 அம்சங்கள்.

ஒரு தரமான நட்புறவைப் பேணும் நபர்கள், தாங்கள் பெறுவதைவிட அதிகமாக தருவார்கள். அதன்மூலமாக அந்த நட்புறவில் பங்குபெற்றுள்ள நபர்களுக்கு நேர்மறை அனுபவங்களும், இனிமையான நினைவுகளும் வாய்க்கப் பெறுகின்றன.

இத்தகைய ஒரு நிறைவுநிலையால், நட்புறவில் மாற்றமும் வளர்ச்சியும் ஏற்படும் நுட்பமான காலகட்டங்களில், நாம் செய்யும் தவறுகளால் ஏற்படக்கூடிய மோசமான விளைவுகளை தடுக்க முடிகிறது.

புரிந்துணர்வு, வாக்குறுதியைக் காப்பாற்றுதல், கண்ணியம், அன்புடைமை, வெற்றிக்கான சிந்தனை, தெளிவான எதிர்பார்ப்புகள், நம்பகத்தன்மை, மன்னித்தல், சிறப்பான தகவல்தொடர்பு போன்றவை, வாழ்க்கையின் இக்கட்டான நேரங்களை சமாளித்து மீளும் வகையில் மிகுதியான நல்லெண்ணத்தை உருவாக்குகின்றன.

**இந்த உலகமானது வெறுமனே 'நான்' மற்றும் 'எனது' எனும் கருத்தாக்கம் தொடர்பானதல்ல என்பதை நாம் உணருகையில், நம்மிடமிருந்து வெளிப்படும் வார்த்தை, சிந்தனை அல்லது செயல் ஆகியவற்றிலிருந்து நட்புறவு தொடங்குகிறது.**

நட்புணர்வைக் கட்டமைக்கும் செயல்பாட்டில், தனிமனிதரின் திறமைகளுக்கு மதிப்பளித்தல், பணிவுடைமை மற்றும் ஒப்புக்கொள்ளுதல் என்பன போன்ற அம்சங்களைப் பின்பற்றுதலானது, எல்லா நேரங்களிலும் எளிய ஒன்றல்ல. மேலும், நட்புறவில் சில விஷயங்கள் நாம் எதிர்பார்ப்பதுபோல் திரும்ப கிடைக்காமலும் போகலாம் என்ற விழிப்புணர்வையும் கொண்டிருக்க வேண்டும்.

ஒருவருக்கு நாம் ஒன்றைத் தருவதன் வாயிலாக நட்புறவை உருவாக்குகிறோம். ஆஸ்திரிய நாட்டு தத்துவ அறிஞர் மார்ட்டின் ப்யூபர் இந்த அம்சத்தை 'நான் மற்றும் நீங்கள்' என்று குறிப்பிடுகிறார். அவரின் ஆஸ்திரிய மொழி சொல்லாக்கமே, ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

ப்யூபர் கூறுவதாவது, 'இந்த உலகில் நாம் இருவகையான அடிப்படை உறவுமுறைகளைக் கொண்டுள்ளோம். தனிமனிதர்களுடன் கொள்ளும் உறவு மற்றும் பொருட்களுடன் கொள்ளும் உறவு. மனிதர்களுடனான உறவுகளில் பொருளியல் தன்மையைக் கொண்டுவருகையிலும், பொருட்களுடனான உறவுகளில் தனிப்பயனாக்கத்தைக் கொண்டுவருகையிலும் நாம் சிக்கலை சந்திக்கிறோம்.

மனித உறவுகளில் பொருளியல் தன்மை இருப்பதை நாம் சில உதாரணங்களின் மூலம் புரிந்துகொள்ளலாம். அவை,

'ஒரு பணிவழங்குநர் (employer), தன் பணியாளர்களைப் (employees) பற்றி எதையும் தெரிந்துகொள்ளாமல் இருப்பது'.

'ஒரு தாயோ அல்லது தந்தையோ, தன் 3 வயது குழந்தை, தனக்கு முத்தம் கொடுப்பதை சில குறிப்பிட்ட நேரங்களில் விரும்பாமல் இருப்பது. காரணம், தனது ஒப்பனை கலைந்துவிடும் அல்லது குழந்தை தன்னைக் கட்டிப்பிடித்து அழுக்காக்கிவிடும் என நினைப்பதால்'.

'ஒருவர், தான் உள்நோக்கத்தோடு அன்பு செலுத்தும் மனிதர்களுடன் அதிகநேரத்தை செலவழிப்பதைக் காட்டிலும், வேறுவிஷயங்களில் அதிகநேரத்தை செலவழிப்பது'.

இத்தகைய உறவுமுறைகளில், 'நான் மற்றும் நீங்கள்' என்ற பதம் காணாமல் போய்விட்டது. பிறருக்கான முக்கியத்துவம் மற்றும் அவர்களுடைய திறன்கள் குறித்தான மரியாதை ஆகியவை நட்புறவுகளில் இன்று இல்லாமல் போய்விட்டது. நட்புறவு என்பது 'நான் மற்றும் எனது' என்றும் 'நான் மற்றும் அவர்கள்' என்றும் பரிமாணம் பெற்றுவிட்டது. நட்புணர்வின் உயிர்நிலையான 'நான் மற்றும் நீங்கள்' என்பது இல்லாமலேயே போய்விட்டது.

நட்புறவு என்பது ஒரு சொல், சிந்தனை அல்லது செயலால் தொடங்குகிறது. நமது உறவுநிலைக்குள் உள்ள குழந்தைகள், 'தருவதற்கு தயார்' என்ற நிலையை அடைகிறார்கள். புரிந்துணர்வு, மன்னிப்பு, கண்ணியம் மற்றும் நம்பகத்தன்மை போன்ற இயற்கையான செல்வங்களுடன் குழந்தைகள் நம்மிடம் வருகிறார்கள். இல்லையெனில், நாம் அனைவரும் அரையாடை கொக்கிகளில் சிக்கிக்கொண்டு எப்போதும் மீளமுடியாமல் இருப்போம்.

**'என்ன *(what)*' மற்றும் 'அதன்பிறகு *(then)*' ஆகிய பதங்கள் 'நான் மற்றும் நீங்கள்' என்ற உறவுநிலையை உருவாக்கும் பொருட்டு, குழந்தைகளுக்கான பெரியவர்களின் பரிசுகளா?**

வாக்குறுதிகளைக் காப்பாற்றுதல், நடத்தைக்கான தெளிந்த எதிர்பார்ப்புகளை உருவாக்குதல், தவறு செய்கையில் மன்னித்தல், தகவல்-தொடர்புக்கான ஒரு சிறந்த வழிமுறையை மேம்படுத்துதல் ஆகிய அனைத்தும் அன்பினாலும் பரிவினாலும் செய்யப்படக்கூடியவை. இவையே, குழந்தைகளுக்கான பெரியவர்களின் பரிசுகள்.

அடிப்படை மனித உறவான 'நான் மற்றும் நீங்கள்' என்பது ஒரு பார்வையின் மூலம் தொடங்குகிறது. அந்தப் பார்வை, ஒவ்வொரு மனிதனின் (குழந்தை அல்லது பெரியவர்) உள்ளார்ந்த திறனின் மீதும் மதிப்புக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்.

அதுவே ஒரு பரிசு..!

***************

*மூல ஆங்கிலக் கட்டுரை:* ***Maren Schmidt (மாண்டிசோரி ஆய்வாளர்)***

*தமிழ் மொழிபெயர்ப்பு: சொ.பிரசன்ன பாரதி (ரிலீஃப் ஃபவுண்டேஷன், சென்னை)*

*மேலதிக விபரங்களுக்கு: www.relieffoundation.in*